கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 54— 'தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு''. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது. திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வல்யுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

'' தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு '' பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 19,48,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்' என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம்' பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

6. தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

1991 செப்டம்பர் 19]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 20—9—1991 அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-00

பேரவை மீண்டும் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

5. மானியக் கோரிக்கைகள், 1991–92, விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,